**46 பன்றிக்குட்டிகளைமந்திரியாக்கியபடலம்**

பன்றிமலையிலே வாழ்ந்துவந்த, பன்றிமுககுமாரர்கள் பன்னிரண்டு பேரும், சகலகலைகளையும் கற்று சிறந்த வீரர்களாகத்திகழ்ந்தனர். அங்கயற்கண்ணி ஐயனிடம் அறிவி இல்லாத மிககொடிய பன்றிகளுக்கு, முலைப்பால்கொடுத்தின் காரணத்தை வினவினாள்.

சகலநூல்களும், தன்னை எல்லா உயிர்களுக்கும் தாய் எனகூறுவதால் தாயின்றி பசியால் வாடித்துடித்த பன்றிக்குட்டிகளுக்கு மனம் இறங்கி முலைப்பால் அளித்ததாக கூறினார். தன்னிடம் பால் அருந்திய அக்குட்டிகள், வலிமையும், அறிவும், வீரமும் பெற்று சிலகாலம் பாண்டியனுக்கு மந்திரிகளாக இருந்துபின் சிவகணங்களாக ஆவார்கள் என பதில் கூறினார்.

ஐயன் அன்றிரவு பாண்டியனின் கனவில் தோன்றி, பன்றி மலையில் வாழும், பன்றிமுகவீரர்களின் திறமைகளையும், தகுதிகளையும் எடுத்துக்கூறி, அவர்களை அவனின் அவையில் மந்திரிகளாக அமர்த்திக் கொள்ளும்படி அருளி மறைந்தார். பாண்டியனும் அவர்களை அழைத்து வந்து, பழைய மந்திரிகளின் குமாரிகளை அவர்களுக்கு மணமுடித்து மந்திரிகளாக அமர்த்திக் கொண்டான்.

பன்றிமுக வீரர்களும் தங்களது கடமைகளைச் சரி வரச் செய்து, அரசனுக்கு தகுந்த ஆலோசகர்களாக இருந்தனர். எட்டு திக்கிலும் பாண்டியனுக்கு வெற்றியுண்டாக்கி, அனைவரும் மகிழ்ச்சியுடன் வாழ்ந்துவந்தனர். பன்றிமுக வீரர்கள் சிலகாலம் சென்றபின் சிவலோகம் அடைந்து சிவகணத் தலைவர்களானார்கள். இராஜராஜபாண்டியன் சிவபதம் அடைந்தான்.

**பல்லவி**

பன்றி முக குமாரர்கள் பன்னிரண்டு பேரும்
பன்றி மலையில் பலகலைகள் பயின்றனர்

**அனுபல்லவி**

மன்னன் கனவில் தோன்றி பன்றி முக வீரர்களை
மந்திரிகளாக்கச் சொல்லி பின் பூதகணமாக்கிக் கொண்டீர்

**சரணம்**

பன்றியின் அறிவை போக்கிய தெப்படியென்றும்
அன்னையும் அதிசயித்து உன்னிடம் கேட்டாள்
அன்னையிடம் தனக்கு சேதனம் அரி சேதனம்
என்றிரண்டும் ஒன்றே என்ற எடுத்துரைத்தீர்